

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | அக்டோபர் 10, 2019 | புரட்சி 18 | முழக்கம் 39 | விலை: ரூ.3.00


## தமிழகம் தழுவி கழகம் ஆர்ப்பாட்டம்

# கல்வி நகலைக் கிழித்து கழகத்தினர் கைது

*காமராசர் நினைவு நாளான அக்.2 ஆம் தேதி புதிய கல்விக் கொள்கை நகலைக் கிழித்தெறியும் ஆர்ப்பாட்டங்களை திராவிடர் விடுதலைக் கழகம் நடத்தியது. தோழர்கள் கைது செய்யப்பட்டனர். ஆர்ப்பாட்டங்கள் குறித்த செய்தித் தொகுப்பு:*

**சென்னை :** தேசிய கல்விக் கொள்கையின் நகல் கிழிப்புப் போராட்டம் சென்னை அண்ணா



சாலையில் உள்ள பெரியார் சிலை அருகே கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் காமராசர் நினைவு நாளான அக்.2ஆம் தேதி பகல் 11.30 மணியளவில் நடந்தது. காமராசர் சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு தோழர்கள் புதிய கல்வித் திட்டத்தைத் திரும்பப் பெறு என்ற முழக்கத்துடன் கல்விக் கொள்கை நகலை கிழித்து எறிந்தனர். ஆர்ப்பாட்டத்தில் 100க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர். பெண் தோழர்கள் உள்ளிட்ட 70 தோழர்கள் கைதானார்கள். சிந்தாதிரிப் பேட்டையில் திருமண மண்டபத்தில் வைக்கப் பட்டனர். அங்கே பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மற்றும் கழகத் தோழர்கள் புதிய கல்வித் திட்டத்தின் ஆபத்துகளை விளக்கி உரை யாற்றினர். 6 மணியளவில் விடுதலை செய்யப் பட்டனர்.

**சேலம்:** புதிய தேசிய கல்விக் கொள்கை வரைவு நகல் கிழிப்பு போராட்டம் சேலம் மாவட்ட



திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது. சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு காலை 11 மணியளவில் ஆர்ப்பாட்டம் துவங்கியது. சேலம் மாநகர அமைப்பாளர் பாலு கண்டன முழக்கங்கள் எழுப்ப அதைத் தொடர்ந்து கழகத் தலைவர் புதிய தேசிய கல்வி கொள்கையின் நகல் கிழித்தெறியும் போராட்டத்தின் நோக்கத்தை விளக்கி உரையாற்றினார். தோழர்களின் கண்டன முழக்கங்களோடு புதிய தேசிய கல்விக் கொள்கையின் வரைவு நகல்கள் கிழித்தெறியப்பட்டன.

ஆர்ப்பாட்டத்தை சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் டேவிட் ஒருங்கிணைத்தார். ஆர்ப்பாட்டத்தில் 110 தோழர்கள் கலந்து கொண்டனர். 5 பெண்கள் 3 குழந்தைகள் உட்பட 85 தோழர்கள் கைது செய்யப்பட்டு கோட்டை கமலா மஹால் மண்டபத்தில் வைக்கப்பட்டு, மாலை 7 மணியளவில் விடுவிக்கப்பட்டனர். கைது செய்யப்பட்டு மண்டபத்தில் அடைத்த உடன் கழகத் தோழர்கள் மிலிட்டரி குமார், கபிலன் விஜி மற்றும் ஆதரவாளர்கள், கர்ணன், கவுதம் தோழர்களுக்கு தேனீர் மற்றும் பிஸ்கட் ஏற்பாடு செய்தனர். த.மு.மு.க. தோழர்கள் இப்ராஹிம் தலைமையில் மண்டபத்திற்கு வந்து தோழர்களை சந்தித்து வாழ்த்து தெரிவித்து இதுபோன்ற போராட்டங்களில் தமுமுகவையும் இணைத்துக் கொள்ளுமாறு கோரிக்கை வைத்தனர். மாலை தமிழ்தேச மக்கள் முன்னணியின் மாவட்ட செயலாளர் மாரியப்பன் தலைமையில் வின்செண்ட் காமராஜ் உட்பட தோழர்கள் வந்து போராட்டத்தில் கலந்து கொண்ட தோழர்களுக்கு வாழ்த்து தெரிவித்தனர். மாலை விடுவிக்கப்பட்ட பின் தமுமுக வழக்கறிஞர்கள் மற்றும் மஜக நிர்வாகிகள் வந்து வாழ்த்து தெரிவித்தார்கள். மண்டபத்தில் சேலம் மேற்கு மாவட்ட செயலாளர் கோவிந்தராசு பெரியாரியல் பாடலுடன் கருத்தரங்கம் துவங்கியது.

அதைத் தொடர்ந்து கல்வியில் தமிழகம் மற்ற மாநிலங்களைவிட எவ்வாறு முன்னேறி உள்ளது என்பதையும் புதிய தேசிய கல்விக் கொள்கை அமுல்படுத்தப்பட்டால் தமிழக மாணவர்கள் எவ்வாறு பாதிக்கப்படுவார்கள் என்பதையும் கழகத் தலைவர் விரிவாக விளக்கி உரை நிகழ்த்தினார்.



**திருப்பூர்:** திருப்பூர் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கழக பொருளாளர் துரைசாமி தலைமையில் நடைபெற்ற கல்விக் கொள்கை நகல் கிழிப்புப் போராட்டம் திருப்பூர் மாநகரில் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் பெண்கள், குழந்தைகள் உட்பட 32 தோழர்கள் கலந்து கொண்டனர். 5 பெண்கள் 6 குழந்தைகள் உட்பட 29 தோழர்கள் கைது செய்யப்பட்டு திருப்பூர் வடக்கு காவல் நிலையத்தில் வைக்கப்பட்டு மாலை விடுதலை செய்யப்பட்டனர்.



**கோவை:** கோவை தலைமை பி.எஸ்.என்.எல். அலுவலகம் முன்பு காலை 11மணி அளவில் கோவை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் கோவை மாவட்ட செயலாளர் வெள்ளிங்கிரி தலைமையில் குலக்கல்வியை வலியுறுத்தும் புதிய தேசிய கல்விக் கொள்கைக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பப்பட்டு நகல்கள் கிழித்தெறியப்பட்டது. 40 தோழர்கள் கலந்து கொண்டனர். 34 பேர் கைதாயினர். அதில் 3 பெண் தோழர்கள், 2 பெரியார் பிஞ்சுகள் மற்றும் தமிழ்நாடு திராவிடர் கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டு மண்டபத்தில் அடைக்கப்பட்டனர்.

கோவை மாவட்ட செயலாளர் வெள்ளிங்கிரி, கோவை மாவட்ட தலைவர் இராமச்சந்திரன், தமிழ்நாடு திராவிடர் கழகத் தலைவர் காசு. நாகராஜன் மற்றும் விஜயராகவன் வகுப்புகளை எடுத்தனர். இறுதியாக கலந்து கொண்ட அனைத்து தோழர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் கோவை மாநகர கழகத் தோழர் லோகு நன்றி தெரிவித்தார். அனைவரும் மாலை 6 மணிக்கு விடுவிக்கப்பட்டனர்.

கைதான தோழர்களை திராவிடர் தமிழர் கட்சி தலைவர் வெண்மணி, களப்பிரார், புரட்சிகர இளைஞர் முன்னணியை சார்ந்த வழக்கறிஞர் முத்து, தமிழ் கொடி, விடுதலை சிறுத்தைகள் கட்சியை சேர்ந்த மருத்துவர் மாணிக்கம் சந்தித்து வாழ்த்து தெரிவித்து சிற்றுண்டிகள் வழங்கி சென்றனர். ஜெனோவா இராமச்சந்திரன் தேனீர் செலவுகளுக்கு 500 ரூபாய் நன்கொடை வழங்கினார்.

**மயிலாடுதுறையில் இரண்டு இடத்தில் போராட்டம் :** பள்ளிப்பாளையம் மாநாட்டில் தலைமைக் கழகம் அறிவித்தப்படி மயிலாடுதுறையில்



காமராசர் நினைவு நாளான 02.10.19 அன்று காலை 10.30 மணிக்கு நாகை மாவட்ட செயலாளர் தெ.மகேஷ் தலைமையில் புதிய தேசிய கல்விக் கொள்கை நகல் கிழிப்பு போராட்டம் நடத்தப்பட்டது. காவல்துறை கழகத் தோழர்கள் கூடுவதற்குக்கூட நேரம் வழங்காமல் முன்கூட்டியே கைது செய்தது. மயிலாடுதுறை நகராட்சி பூங்கா மற்றும் வட்டாச்சியர் அலுவலகம் ஆகிய இரு இடங்களில் போராட்டம் நடத்தப் பட்டது. போராட்டத்தில் தமிழர் உரிமை இயக்கத் தோழர்களும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம் மற்றும் மக்கள் அரசு கட்சியை சேர்ந்த தோழர்களும் பங்கேற்றனர்.

**ஈரோடு:** ஈரோடு மாவட்டம் சார்பில் கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி முன்னிலையில், ஈரோடு வீரப்பன் சத்திரம் பேருந்து நிறுத்தத்தில் காலை 11 மணிக்கு புதிய கல்விக் கொள்கை நகல் கிழிப்பு போராட்டம் நடைபெற்றது. 15 ற்கும் மேற்பட்ட தோழர்கள் கைது செய்யப்பட்டு மாலை விடுவிக்கப்பட்டனர்.

**பழனி :** திண்டுக்கல் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் பழனி பேருந்து நிலையம்




இரவுண்டானா அருகில், மருதமூர்த்தி தலைமையில் புதிய கல்விக் கொள்கை நகல் கிழிப்புப் போராட்டம் காலை 11 மணிக்கு நடைபெற்றது. 12 தோழர்கள் கைது

(4ஆம் பக்கம்)

## காந்தி 150ஆவது பிறந்த நாளிலும் 7 தமிழர்கள் விடுதலைக்குத் தடை ஏன்?

பேரறிவாளன், நளினி, முருகன், சாந்தன் உள்ளிட்ட 7 தமிழர் விடுதலை செய்யக் கோரி தமிழக அமைச்சரவை ஒப்புதல் வழங்கி சுமார் 400 நாட்கள் ஓடிவிட்டன. அதுவும் உச்சநீதிமன்றம் தமிழக அமைச்சரவைக்கு அரசியல் சட்டம் வழங்கியுள்ள 161ஆவது பிரிவு அதிகாரத்தைப் பயன்படுத்தலாம் என்று தெளிவாக்கிய பிறகு அமைச்சரவை எடுத்த முடிவு அது.

அமைச்சரவையின் முடிவுக்கு ஆளுநர் உடன்பட வேண்டும் என்று அரசியலமைப்பு தெளிவாக விளக்குகிறது.

தமிழக ஆளுநராக இருந்த பாத்திமா பீவி, தன்னிச்சையாக ராஜீவ் கொலைக் குற்றவாளிகளைத் தூக்கிலிட அனுமதித்தபோது சென்னை உயர்நீதிமன்றம் ஆளுநருக்கான உரிமைஅமைச்சரவை பரிந்துரையின் அடிப்படையில் செயல்படுவது மட்டுமே என்று தெளிவுபடுத்தி ஆளுநரின் முடிவை நிறுத்தியது. அதற்குப் பிறகு தி.மு.க. அமைச்சரவை கூடி நளினியின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்தபோது ஆளுநர் பாத்திமா பீவி அதற்கு ஒப்புதல் வழங்கினாரே தவிர, தற்போது ஆளுநர் செய்ததுபோல் கிடப்பில் போடவில்லை.

காந்தியின் 150ஆவது பிறந்த நாளில் 617 சிறைவாசிகளை விடுதலை செய்ய நடுவண் அரசு ஒப்புதல் வழங்கியிருப்பதாகவும் கடந்த ஓராண்டில் 2035 கைதிகளுக்கு தண்டனைக் குறைப்பு வழங்கப்பட்டதாகவும் நடுவண் ஆட்சி அறிவித்திருக்கிறது. இந்த நிலையில்கூட 7 தமிழர் விடுதலைக்கு ஒப்புதல் வழங்க ஏன் மறுக்க வேண்டும்? தார்மீக ரீதியாகவோ சட்ட ரீதியாகவோ இதற்கு என்ன விளக்கத்தை நடுவண் அரசு கூறுகிறது?

சரி, மாநில அரசும் அமைச்சரவையைக் கூட்டி பரிந்துரை வழங்கிவிட்டோம்; எங்கள் கடமை முடிந்து விட்டது என்று ஒதுங்கி நிற்பதுதான் அவர்கள் தலைவியாக ஏற்றுக் கொண்டிருக்கிற செல்வி ஜெயலலிதா காட்டிய பாதையா? மாநில அரசுக்கு விடுதலை செய்யும் உரிமை உண்டு என்று உச்சநீதிமன்றம் அறிவித்த அடுத்த சில நாட்களிலேயே 7 தமிழர் விடுதலையை சட்டமன்றத்தில் அறிவித்து நடுவண் அரசுக்கு கெடுவிதித்தார் ஜெயலலிதா. மாநிலங்களுக்கான உரிமைகளில் அவ்வளவு உறுதிகாட்டி செயல்பட்டார். இப்போது தமிழக அரசு ஏன் பதுங்கி நிற்க வேண்டும்?

பஞ்சாபில் இப்போது காங்கிரஸ் ஆட்சி தான் நடக்கிறது. குருநானக் 550ஆவது பிறந்தநாளையொட்டி 550 சிறைக் கைதிகளை விடுதலை செய்ய முன் வந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, பஞ்சாப் மாநில முதல்வராக இருந்த பியாந்த் சிங்கை சுட்டுக் கொன்ற பல்வந்த் சிங் ரோஜனா என்ற தூக்குத் தண்டனைக் குற்றவாளியின் தண்டனையை ஆயுள் தண்டனையாகவும் குறைக்க முடிவு செய்துள்ளது. அதற்காக மத்திய உள்துறை அமைச்சகத்திடம் உரிய அனுமதியையும் பெற்றிருக்கிறது.

பியாந்த் சிங் யார்?

காங்கிரஸ் கட்சியின் சார்பில் பஞ்சாப் மாநில முதல்வராக 1992 முதல் 1995 வரை பதவியில் இருந்தவர். அவரை 'கார் வெடி குண்டை' வெடிக்கச் செய்து கொன்றவர்தான் பல்வந்த் சிங் ரோஜனா!

'ஆம்! நான்தான் கொலை செய்தேன்; அதற்காகப் பெருமைப்படுகிறேன்' என்று நீதிமன்றத்தில் ஒப்புதல் வாக்குமூலம் தந்து எதிர் வழக்காட விரும்பாமல் தண்டனையை ஏற்றவர். சொந்த காங்கிரஸ் கட்சி முதல்வரையே வெடிகுண்டுக்கு பலியாக்கிய சீக்கியரின் தூக்குத் தண்டனையைக் குறைக்க காங்கிரஸ் ஆட்சி முன் வந்திருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டு காங்கிரஸ் கட்சியினரோ 7 தமிழர் விடுதலைக்கு தொடர்ந்து எதிர்க்கிறார்கள். இத்தனைக்கும் ராஜீவ் கொலையில் நேரடி தொடர்பே இல்லாதவர்கள் இந்த 7 தமிழர்கள். "இது பயங்கரவாத நடவடிக்கை அல்ல. பயங்கரவாத சட்டமும் இதற்குப் பொருந்தாது" என்று உச்சநீதிமன்றமே தனது தீர்ப்பில் தெளிவாக்கியிருக்கிறது. நால்வருக்குத் தூக்குத் தண்டனை விதித்த தலைமை நீதிபதி கே.டி. தாமஸ், பதவி ஓய்வுக்குப் பிறகு அரசியல் நிர்ப்பந்தம் காரணமாகவே நான் அவர்களைத் தண்டித்து விட்டேன் என்று மனம் உருகிப் பேசி வருகிறார்.

காந்தியின் கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நாதுராம் கோட்சேயின் தம்பி, கோபால் கோட்சே, 14 ஆண்டுகளில் தண்டனையை குறைப்பு வழங்கி விடுதலை செய்யப்பட்டார். தண்டனைக் குறைப்பு வழங்கியதும் காங்கிரஸ் ஆட்சி தான்.

குஜராத்தில் மோடி ஆட்சியில் 2000 இஸ்லாமியர்களை இனப்படுகொலை செய்த குற்றவாளிகள் இப்போது ஒருவர் பின் ஒருவராக விடுதலை செய்யப்படுகிறார்கள். அவர்கள் விடுதலைக்கு பா.ஜ.க. ஆட்சியாளர்களே உதவுகிறார்கள். மேல்முறையீட்டுக்கு செல்லாமல் காப்பாற்றி வருகிறார்கள்.

2008ஆம் ஆண்டு மாலேகான் மசூதியில் குண்டுவெடிக்கச் செய்து 6 பேர் உயிர்ப் பலியானதற்குக் காரணமானவர் பிரக்யாசிங் தாகூர். அதேபோல் பாகிஸ்தானுக்கு செல்லும் சம்ஜவுதா எக்ஸ்பிரஸ் இரயிலில் குண்டு வைத்து 68 பேர் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்தவர் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப் பட்டவர். வழக்கிலிருந்து இவரைக் காப்பாற்ற 'தேசிய புலனாய்வு முகாம்' வழியாக எவ்வளவோ முயற்சிகள் செய்தது பா.ஜ.க. ஆட்சி. சாட்சிகளை விலைக்கு வாங்கி பிறழ்சாட்சிகளாக மாற்றினர். ஆனாலும் குண்டு வெடிப்புக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனம் பிரக்யாசிங் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது உள்ளிட்ட சந்தர்ப்ப சாட்சியங்கள் அவருக்கு எதிராக இருப்பதால் வழக்கிலிருந்து விடுவிக்க மறுத்து விட்டது விசாரணை நீதிமன்றம்.

ஆனாலும் என்ன? உடல்நிலை சரியில்லை என்று கூறி, பரோல் கேட்டார். உடனே பரோல் கிடைத்து விட்டது. உடனே போபால் தொகுதியின் வேட்பாளராக்கியது பா.ஜ.க. இப்போது அவர் நாடாளுமன்ற உறுப்பினர். யார்? 74 பேர் மரணத்துக்குக் காரணமானவர்; பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்.

இவ்வளவுக்குப் பிறகு 7 தமிழர்கள் 28 ஆண்டுகளாக சிறையில் வாடுகிறார்கள். ஒட்டு மொத்தத் தமிழகமும் இவர்களின் விடுதலையை வலியுறுத்துகிறது.

தமிழக காங்கிரஸ் கட்சி 'எஜமான்' விசுவாசம் காட்டுகிறது. ஆனால் ராகுல் காந்தியே இவர்கள் விடுதலையை தான் எதிர்க்கவில்லை என்று கூறி விட்டார்.

நேரு குடும்ப எதிர்ப்பையே தனது கொள்கையாகக் கொண்டிருக்கும் பா.ஜ.க.வும் சங் பரிவாரங்களும் 7 தமிழர் விடுதலையை ஏன் முடக்குகிறது?

காங்கிரசின் 'பரம எதிரி' யான சுப்பிரமணிய சாமி, ஏழு தமிழர் விடுதலைக்கு ஏன் குறுக்கே நிற்கிறார்?

இந்திய அரசியலில் ஆட்சிகள் மாறினாலும் பார்ப்பனர்கள் செலுத்தி வரும் தங்குதடையற்ற அதிகாரமே இதற்குக் காரணம். இந்த தமிழர்கள் விடுதலையை பார்ப்பனரல்லாத இன உணர்வுக் கொள்கைக்குக் கிடைத்த வெற்றியாகி விடும் என்று கருதுகிறார்கள். சொல்லப் போனால் தேவ – அசுரப் போராட்டத்தின் தொடர்ச்சி தான். சீக்கியர்களுக்கு உள்ள உணர்வு தமிழர்களுக்கு வர வேண்டாமா?

இந்த நிலையில் தமிழக அரசுக்கு நாம் ஒரு வேண்டுகோள் வைக்கிறோம் – மீண்டும் ஒரு முறை தமிழக அரசு அமைச்சரவையைக் கூட்டி 7 பேர் விடுதலையை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்ற முன் வாருங்கள்!

## 2021க்குள் முஸ்லிம்–கிறித்துவர்கள் ஒழிக்கப்படுவார்கள்: பா.ஜ.க. தலைவரின் 'தேச பக்தி'ப் பேச்சு

மதத்தின் பெயரால் நடத்தப்படும் கும்பல் வன்முறையைத் தடுத்து நிறுத்தக் கோரி திரைத் துறை, கலைத் துறையைச் சார்ந்த 42பேர் மோடிக்கு கடிதம் எழுதியதால் அவர்கள் மீது தேச துரோக வழக்கு பதியப்பட்டுள்ளது.

ஆனால் மோடி ஆட்சியில் 'தேச பக்தர்கள்' எப்படி பேச வேண்டும்? இப்படித்தான்!

டிசம்பர் 31, 2021க்குள் இந்தியாவிலிருந்து முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள் முற்றாக ஒழிக்கப்படுவார்கள் என்று பா.ஜ.க. ஆர்.எஸ்.எஸ் முன்னணித் தலைவர்களில் ஒருவரான ராஜேஸ்வர் சிங் வெளிப்படையாக அறிவித்துள்ளார். அதேபோல் "இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களையும் ஒழித்து விடுவோம்; இது நாங்கள் எடுத்துள்ள உறுதி" என்றும் அவர் பேசியுள்ளார். மேற்கு உ.பியில் வாழும் இவர் தொடர்ந்து இனவெறுப்பு இன அழிப்புக் கருத்துகளைப் பேசி வருபவர். 'லவ் ஜிகாத்' அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகம் பற்றி சர்ச்சைக்குரிய கருத்துகளை பேசி வரும் இவரைத் தான், மீண்டும் "தாய் மதம் திரும்புதல்" என்ற இயக்கத்துக்கு ஆர்.எஸ்.எஸ். தலைவராக நியமித்தது. 'தர்ம ஜக்ரான் சமிதி' என்ற அமைப்பின் தலைவராக உள்ள ராஜேஸ்வர்சிங், "2021இல் இந்து இராஷ்டிரத்தை அமைப்பதே எங்கள் இலக்கு. முஸ்லிம்களாக, கிறிஸ்தவர்களாக இந்த நாட்டில் வாழ்வதற்கு உரிமை கிடையாது. அவர்கள் இந்துவாக மாற வேண்டும். அல்லது நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என்று அவர் பேசியுள்ளார். இந்து மகாசபா "இஸ்லாம் இல்லாத இந்தியா" என்ற இயக்கத்தைத் தொடங்கியுள்ளது. சத்வி தேவா தாக்கூர் என்ற பா.ஜ.க. பெண் சாமியார், அவசர நிலையை பிரகடனம் செய்து இஸ்லாம், கிறிஸ்தவர்களுக்கு கர்ப்பத்தடை செய்ய வேண்டும் என்று பேசியுள்ளார். சாத்வி சரஸ்வதி என்ற இந்துத்துவ பெண் 'சாமியார்' மாட்டிறைச்சி சாப்பிடுவோரை தூக்கிலிட வேண்டும் என்று பேசியுள்ளார்.

150 தீவிர இந்து அமைப்புகள் இந்தியாவை 2023க்குள் இந்து இராஷ்டிரமாக்குவோம் என்ற முழக்கத்தோடு கோவாவில் 4 நாட்கள் மாநாடு நடத்தி தீர்மானித்துள்ளன. மோடி ஆட்சியில் இவர்கள் எல்லாம் தேச பக்தர்கள்!

ஆனால் கும்பல் கொலைகளைத்தடுத்து நிறுத்துங்கள் என்று கடிதம் எழுதியவர்கள் தேசத் துரோகிகள்!

### பார்ப்பன அகராதியில் இதுதான் 'தேச பக்தி'!




மோடி காந்தியைப் புகழ்ந்து பேசுகிறார். ஆனால் 'டிவிட்டரில்' அவரைப் பின் தொடருகிறவர்கள் 'கோட்சே கடவுள்', 'கோட்சே வீரன்', 'காந்தியை சுட்டது சரி' என்று பதிவிட்டு வருகிறார்கள். இவர்களின் காந்தி ஆதரவு வேடம் அம்பலப்பட்டு நிற்கிறது. தமிழ்நாட்டுப் பார்ப்பனரான எச். ராஜா தன்னை 'தேச பக்தன்' என்றும் மோடியை விமர்சித்தால் இந்திய விரோதி என்றும் பேசி வருகிறார்.

ஆனால் எச். ராஜாவின் பிறந்த நாளுக்கு அவரது ஆதரவாளர்கள் 'தென்னாட்டு கோட்சே' என்று வாழ்த்தி சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர். காவல்துறையும் கைகட்டி வாய் பொத்தி 'நவீன தேச பக்தர்களுக்கு' சல்யூட் செய்கிறது!

## காவல் நிலையங்களில் ஆயுத பூஜை நிறுத்தக் கோரி கோவை கழகம் காவல்துறையில் மனு



அரசு அலுவலகங்களில் மதம் சார்ந்த பண்டிகைகள் கொண்டாடக்கூடாது என்று அரசாணை உள்ளது. எனவே அந்த அரசாணையை அரசு அதிகாரிகள் முறையாக காப்பாற்ற வேண்டும் என திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் 5.10.2019 அன்று கோவை மாநகர காவல் ஆணையாளரிடமும், கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடமும், கோவை மாவட்ட ஆட்சியரிடமும் கழகத் தோழர்கள் நிர்மல், வெங்கட், கிருஷ்ணன், இயல் ஆகியோர் மனு கொடுத்தனர்.

காந்தி 150



## ஜாதி-மத மறுப்பு திருமணங்களை ஆதரித்தார்

காந்தி தென்னாப்பிரிக்காவில் இருந்த போது ஹென்னிபோலர் என்ற யூதருக்கும் - மில்லிகிரகாம் டவுன்ஸ் என்ற ஸ்காட்லாந்து கிறித்துவப் பெண்ணுக்கும் திருமணத்தை நடத்தி வைத்தார். காந்தியின் ஜோகன்ஸ்பர்க் நகரிலுள்ள இல்லத்தில் இந்த தம்பதிகள் ஓராண்டு காலம் காந்தியுடன் தங்கியிருந்தனர். பிறகு காந்தி, தனது குடும்பத்துடன் ஃபோனிக்ஸ் நகரத்துக்கு குடியேறியபோது இந்த தம்பதியினரும் அந்த நகரத்துக்கே குடியேறினர். இது குறித்து காந்தி தனது சுயசரிதையில் இவ்வாறு பதிவு செய்துள்ளார்.

“தங்களுக்கிடையிலான உறவில் மதங்கள் குறுக்கிடுவதை அவர்கள் விரும்பவில்லை. அவை தேவையற்றது என்றே கருதினர். திருமதி போலர் பிறப்பால் ஒரு கிறிஸ்துவர். போலர் ஒரு யூதர். இருவருக்கும் பொதுவான மதம் - ஒழுக்கம் என்ற மதமே” (Their comman religion was the relgion of ethics) என்று எழுதினார் காந்தி. தன்னுடைய மகன் இராமதாஸ், தனது ஜாதிக்கு வெளியே வேறு ஒரு உட்ஜாதியில் திருமணம் செய்து கொள்ள காந்தி அனுமதித்தார். மற்றொரு மகன் தேவதாசை வேறு ஒரு வர்ணத்தைச் சார்ந்த பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள சம்மதித்தார். தனது ‘தீண்டப்படாத’ சமூகத்தைச் சார்ந்த வளர்ப்பு மகள் இலட்சுமியை ஒரு ‘பிராமண’ இளைஞருக்கு திருமணம் செய்து வைத்தார். ஜாதிகளுக்கிடையே நடக்கும் திருமணங்களுக்கு காந்தி தனது ஆதரவை பலமுறை வெளிப்படுத்தியிருக்கிறார்.

காந்தி 150

## ஆசிரமத்துக்குள் ஒரே ஜாதி திருமணத்துக்கு தடை போட்டார்

சபர்மதி ஆஸ்ரமத்தில் காந்தியின் மகன் இராமதாஸ் திருமணம் நடந்தது. (ராமதாஸ் காந்தியின் ஜாதிக்குள் வேறு உட்ஜாதிப் பிரிவைச் சார்ந்த பெண்ணை திருமணம் செய்து கொண்டார்) அந்தத் திருமண நிகழ்வின்போது காந்தியின் பேச்சு:

“இப்போது நடந்து முடிந்துள்ள இத் திருமணம்தான், இந்த ‘ஆஸ்ரமத்தில்’ ஒரே ஜாதிக்குள் நடக்கும் கடைசி திருமணமாக இருக்க வேண்டும். ஜாதி கடந்த திருமணங்களை நடத்துவதில் இந்த ஆஸ்ரமத்தில் உள்ளவர்கள் மக்களுக்கு வழிகாட்ட வேண்டும். காரணம், இந்த சீர்திருத்தத்தை முன்னெடுப்பது ஆஸ்ரமத்துக்கு வெளியே உள்ள மக்களுக்கு கடினமானது. ஒரே ஜாதிக்குள் நடக்கும் திருமணங்களை கைவிட வேண்டும் என்பதே இந்த ஆஸ்ரமத்தின் விதிகளாக்கப்பட வேண்டும். அத்துடன் பல்வேறு உள் ஜாதிப் பிரிவினரிடையே நடக்கும் திருமணங்களை ஊக்குவிக்க வேண்டும் (The rule should be on the part of the Ashramam to discountenance marriage between the parties of the some caste and to encourage those between parties belonging to different sub-castes).”

1945 ஆகஸ்டு 19ஆம் தேதி காந்தி ‘சேவா கிராம ஆஸ்ரமத்தில்’ ஏ.ஜி. டெண்டுல்கர் என்ற பார்ப்பனருக்கும், இந்துமதி என்ற ‘தீண்டப்படாத’ப் பெண்ணுக்கும் திருமணம் நடத்தி வைத்தார். காந்தி ஆஸ்ரமங்களில் ஒரே சமையல் அறைதான். ஒரே வரிசையில் அமர்ந்து அனைவரும் சாப்பிடுவர்.

காந்தி 150

## கோயில் தரிசனத்தை விரும்பாதவர்

அருகே உள்ள கோயில்களுக்குச் சென்று ‘கடவுளை’ வணங்குதல்; தங்களுக்கு விருப்பமான கடவுளை வணங்குதல் - இவையெல்லாம் இந்துக்களின் வழிபாட்டு முறை. காந்தியின் வரலாற்றை அண்மையில் எழுதியுள்ள ஜோசப் லேலிவெல்ட் (Joseph Lelyveld) “காந்தி கோயில்களுக்குச் செல்லும் பழக்கம் உடையவரல்ல” என்று எழுதியிருக்கிறார். அது மட்டுமல்ல, ‘காந்தி புரோகிதர்களின் அதிகாரத்தை ஏற்கக்கூடிய இந்து அல்ல’ என்றும் அவர் கூறுகிறார். இது குறித்து தனது சுயசரிதையில் காந்தி இவ்வாறு கூறுகிறார்:

‘வைசிய குடும்பத்தில் பிறந்ததால் நான் அடிக்கடி கோயிலுக்குப் போக வேண்டியிருந்தது. ஆனால் கோயில்கள் என்னை ஈர்க்கவில்லை. அங்கே நடக்கும் ஆடம்பரத் திருவிழாக்களையும் பகட்டு வெளிச்சங்களையும் நான் விரும்பவில்லை. கோயிலுக்குள் ‘ஒழுக்கக் கேடுகள்’ நடக்கின்றன என்ற செய்திகள் என் காதுகளுக்கு எட்டுகின்றன. எனவே அங்கே போவதற்கு எனக்கு ஈடுபாடோ விருப்பமோ வரவில்லை. கோயில்களுக்குப்போய் எனக்கு கிடைக்கப் போவது எதுவும் இல்லை” (I could gain nothing from the haveli temple) என்று காந்தி தனது சுயசரிதையில் கூறுகிறார்.

தகவல்களுக்கு ஆதாரம் :
பேராசிரியர் ரிஷிகாந்த் - திரிபுரா பல்கலையில் சமர்ப்பித்த ஆய்வறிக்கை.
‘எக்னாமிக் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி’, ஏப்.1, 2017

காந்தி 150

## பூணூல் போட மறுத்தார்

வர்ணாஸ்ரம சமூக அமைப்பில் (சூத்திரர் தவிர) மேலே உள்ள மூன்று வர்ணப் பிரிவினரும் பூணூல் போடும் உரிமை பெற்றவர்கள். காந்தியும் இளம் வயதில் அதற்குரிய சடங்குகள் நடத்தப்பட்டு ‘பூணூல்’ போடப்பட்டவர்தான். இது குறித்து தனது சுயசரிதையில் “நானும் பூணூல் போட்டிருந்தேன். அந்தப் பூணூல் தொலைந்து போனபோது அது பற்றி எனக்கு எந்தக் கவலையும் வரவில்லை. ஆனால் புதிய பூணூலை அணிவது இல்லை என்ற முடிவுக்கு வந்து விட்டேன் என்பது எனக்குத் தெரியும் (But I know that I did not go for a fresh one).

காந்தியின் குடும்பம் வைசியர் பிரிவு. கழுத்தில் துளசி மாலை அணிவது கட்டாயம். “நான் இங்கிலாந்து போக முடிவு செய்தவுடன், துளசி மாலையை கழற்றிவிட்டேன்”. தென்னாப்பிரிக்காவில் இருந்தபோதும் துளசி மாலையை அணியும் பழக்கத்தை காந்தி கைவிட்டு விட்டார்.

காந்தி 150

## ‘புனித’ நூல்களின் அதிகாரத்தை மறுத்தார்

நான்கு வேதங்கள், உபநிஷத்துகள், புராணங் கள், இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களே இந்து மதத்தின் அதிகாரம் படைத்தவை. இவைகளில் கூறப்பட்டுள்ள கருத்துகள் கடவுளால் சொல்லப் பட்டவை என்பதே பாமர இந்துக்களின் நம்பிக்கை. இவைகளை ‘மாற்றவே முடியாது’ என்போரே ‘சனாதனிகள்’ (மாற்றவே முடியாது என்று நம்புவோர்) காந்தி தன்னை சனாதனி என கூறிக் கொண்டார். அப்படி கூறிக் கொண்டே “சாஸ்திரங்களிலிருந்து மேற்கோள்களைக் காட்டி என்னை யாரும் - எனது கருத்துகளிலிருந்து மாற்றிவிட முடியாது” என்று கூறினார். “எனது குழந்தைப் பருவத்தில் புனித நூல்களின் கருத்துகள் எனக்கு வாழ்க்கை யில் பெரிதும் உதவும் என்று கருதினேன். ஆனால் வேதங்களின் கருத்துகள் எனது வாழ்க்கைக்கு தேவையானவற்றை வழங்கவில்லை. (The Vedas could not supply that need).

“எனக்கு சாஸ்திரங்களில் நம்பிக்கை உண்டு; ஆனால் அவைதான் இறுதியானவை. கடவுளால் சொல்லப்பட்டவை என்ற கருத்தை நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன்” என்றார். அப்படியானால் இறுதியான அதிகாரம் படைத்த முடிவு எங்கே இருக்கிறது என்று கேட்டபோது காந்தி, தனது நெஞ்சைத் தொட்டு, “அது இங்கேதான் உறைந்திருக் கிறது” என்றார். அவர் இது குறித்து தனது கருத்தை தெளிவாகவே விளக்கினார்.

“கீதை உட்பட எந்த புனித நூல்களின் கருத்துகள் என்றாலும், அந்த கருத்துகளை எனது மனசாட்சி யோடு பொருத்தித்தான் பார்ப்பேன். எந்த புனித நூல்களாலும் அது எனது மனசாட்சியைவிட மேலானதாக ஆதிக்கம் செலுத்த நான் அனுமதிக்க மாட்டேன். பல நூல்களின் மூல கருத்துகள் உயர்ந்த நோக்கம் கொண்டவை என்று நான் நம்பினாலும், அந்த நூல்களின் கருத்துகள் என்னுள் பாதிப்புகளை உண்டாக்குகின்றன என்றாலும், அந்த கருத்துகள் திருத்தலுக்கு உள்ளாக்கப்பட்டே வெளி வருகின்றன. இந்த புனித நூல்களுக்கு முதலில் தூதர்களும், பிறகு விளக்கம் தர வந்தவர்களும் வெவ்வேறு விளக்கங்களை தந்து விடுகிறார்கள். எந்தக் கருத்தும் கடவுளிடமிருந்து நேரடியாக வந்து சேரவில்லை (Nothing in them comes from god directly)” என்றார் காந்தி.

காந்தி 150

## ‘தீண்டாமை ஒழிய வர்ணாஸ்ரமம் அழிந்தால் கண்ணீர் சிந்த மாட்டேன்’

‘முன் ஜென்ம பலன்’ என்பதற்கு வைதிக மதம் தரும் விளக்கங்களை காந்தி புறந்தள்ளி இவ்வாறு எழுதுகிறார்: “ ‘கர்மா’ என்ற முன்ஜென்ம விதி தத்துவம் மனிதர்களை மதிக்கவில்லை என்றால், அந்த தத்துவத்தை மத பழமைவாதிகளிடமே விட்டு விடுங்கள்; தனது ‘தலைவிதி’யை நிர்ணயிப்பது மனிதன் மட்டும்தான். எனவே உங்கள் ‘தலைவிதி’யை உருவாக்கிக் கொள்ளும் மனிதர்களாக மாறுங்கள் (Man is the makers of his own destiny, and I therefore ask you to become makers of your own destiny).”

அவரது நடைமுறை வாழ்விலேயே ‘முன்ஜென்மப் பயன்’ என்ற கருத்தை நிராகரித்தார் என்பதற்கு சான்றுகள் உண்டு. நோயால் அவதிப்பட்ட ஒரு பசுவை கொன்றுவிடச் சொன்னார். முன் ஜென்ம விதிப்படியே பசு இந்த நோயை அனுபவிக்கிறது என்ற கருத்தை ஏற்க மறுத்தார். 1928ஆம் ஆண்டில் தனது ‘ஆஸ்ரமத்தில்’ தீர்க்க முடியாத ஒரு நோயினால் அவதிப்பட்ட பசுவின் கன்றுகுட்டியை கொன்றுவிட காந்தி கூறினார். ஆஸ்ரமத்தில் சிலர் கடுமையாக எதிர்த்தனர். தனது முடிவை நியாயப்படுத்திய காந்தி, ‘மனிதருக்கு இத்தகைய நிலை வந்தாலும் இதே முடிவைத்தான் எடுப்பேன்’ என்றார்.

‘வர்ணாஸ்ரம’ சமூக அமைப்பை தொடக்கக் காலங்களில் நியாயப்படுத்தி வந்த காந்தி, பிற்காலத்தில் இவ்வாறு எழுதினார்:

“தீண்டாமை ஒழியும்போது ‘வர்ணா ஸ்ரமம்’ குப்பைக் கூடைக்கு அனுப்பப்படும் என்றால், அதற்காக நான் கண்ணீர் சிந்த மாட்டேன் (If Varnashrama goes to the dogs, in the removal of untouchability, I shall not shed a tear).”

மேலும் காந்தி இவ்வாறு கூறினார்: “வர்ணாஸ்ரமத்தை ஆதரித்து எங்கேயும் போய் நான் பிரச்சாரம் செய்யவில்லை; ஆனால் தீண்டாமையை ஒழிக்க வைக்கம் சென்றேன். கதர், இந்து-முஸ்லிம் ஒற்றுமை, தீண்டாமை ஒழிப்பு இந்த மூன்றும் சுயராஜ்யத்தின் மூன்று தூண்கள் என்று, காங்கிரஸ் கட்சியில் தீர்மானம் நிறைவேற்றச் செய்து, இதை மக்களிடம் பிரச்சாரம் செய்ய வைத்தது நான் தான். ஆனால் வர்ணாஸ்ரம சமூக அமைப்பை உறுதி செய்ய வேண்டும்; அதுவே சுயராஜ்யத்தின் நான்காவது தூண் என்று ஒரு போதும் நான் கூறியது இல்லை. (I have never placed establishment of varnashrama dharma as the fourth pillar) எனவே ‘வர்ணாஸ்ரம’ சமூக அமைப்புக்கு நான் தவறாக அழுத்தம் தந்து வந்தேன் என்று நீங்கள் என்னை குற்றம் சாட்ட முடியாது” என்று காந்தி கூறினார்.

காந்தி 150

## ஜாதிய கட்டுப்பாடுகளைத் தகர்த்தார்

ஜாதி அமைப்பை ஆதரித்து எழுதிய காந்தி, ஜாதிகளுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை இளம் வயதிலிருந்தே மீறி வந்திருக்கிறார். வெளிநாடுகளுக்கு பயணம் செய்வதை காந்தி பிறந்த ஜாதி தடை செய்திருந்தாலும், காந்தி சட்டம் படிக்க இங்கிலாந்து சென்றார். அவரது சொந்த ஜாதிக்காரர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். “ஜாதியிலிருந்து விலக்கி வைக்கப் போவதாக - ஜாதித் தலைவர்கள் கூறினாலும், அப்படி விலக்கினாலும் எனது வெளிநாட்டுப் பயணத்தைத் தடுக்க முடியாது” என்றார் காந்தி.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# பெரியார் கொள்கை விளக்கக் கூட்டங்கள்

**குமாரபாளையத்தில் :** 28.09.2019 அன்று நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் பேருந்து நிலையத்தில் தந்தை பெரியாரின் 141ஆவது பிறந்தநாள் விழா




பொதுக்கூட்டம் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் நடைபெற்றது. பொதுக்கூட்டத்திற்கு, மு.கேப்டன் அண்ணாதுரை தலைமை வகிக்க, மாவட்ட அமைப்பாளர் முத்துப்பாண்டி, மாவட்ட செயலாளர் சரவணன், காளிபட்டி பெரியண்ணன், இராசிபுரம் பிடல் சேகுவேரா ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்வின் தொடக்கமாக காவை இளவரசன் அவர்களின் மந்திரமா? தந்திரமா? நிகழ்ச்சி நடைபெற்றது. அதன்பின் கோபி வேலுச்சாமி, பகுத்தறிவுக் கருத்துக்களை நகைச்சுவையாக எடுத்துக் கூறினார்.

இறுதியாக கழக வெளியீட்டுச் செயலாளர் இராமஇளங்கோவன், புதிய கல்விக் கொள்கை, நீட் தேர்வின் மோசடிகள் போன்றவற்றைப் பற்றி விரிவாக உரை நிகழ்த்தினார். குமாரபாளையம் பகுதி மோகன் நன்றி கூறினார். பொதுக் கூட்டத்திற்கு காளிப்பட்டி, திருச்செங்கோடு, பள்ளிபாளையம், இராசிபுரம், ஈரோடு, பவானி பகுதிகளைச் சேர்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர். பெரியார் இல்லம் திராவிடமணி இல்லத்தில் தோழர்களுக்கு உணவு வழங்கப்பட்டது.

**மதுரையில் :** 30 ஆண்டுகளுக்கு பிறகு முதல் முறையாக பெரியார் கொள்கையை பரப்பும் முதல் கூட்டம். 23.09.2019 அன்று மாலை 5 மணிக்கு, மேலூரில், பெரியார் 141ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தந்தை பெரியாரால் தலை நிமிர்ந்தோம்




பொதுக்கூட்டம் நடைபெற்றது. பறை முழக்கத்துடன் தொடங்கிய பொதுக் கூட்டத்தை திருநங்கை செயற்பாட்டாளர் பாரதி கண்ணம்மா தொடங்கி வைத்தார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வட்டார செயலாளர் கண்ணன், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தொகுதி செயலாளர் அய்யாவு, SDPI கட்சியின் புறநகர் மாவட்ட செயலாளர் கே.ஜியாவுதின் வாழ்த்துரை வழங்கினார்கள். ஆராய்ச்சி மாணவி மாளவிகா, தமிழ் தேச மக்கள் முன்னணியின் தலைவர் மீ.த. பாண்டியன் உரையாற்றினார்கள். இறுதியாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

மாவட்ட செயலாளர் மா.பா. மணி அமுதன் தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் காமாட்சி பாண்டியன், மேலூர் பொறுப்பாளர் சத்திய மூர்த்தி முன்னிலை வகித்தனர். 30 ஆண்டுகளுக்கு பிறகு பெரியார் கொள்கையை பரப்பும் முதல் கூட்டம் இது என்பதும் - கொட்டும் மழையோடும் பொது மக்கள் கூட்டத்தில் பங்கேற்றார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். ஆர்ப்பாட்டத்திற்கு பழனி, ஆக்களையாம் புத்தூர் பகுதிகளைச் சேர்ந்த தோழர்கள் கலந்து கொண்டனர்.

**திருச்சி:** திருச்சி மாவட்டம் சார்பில், புதிய கல்விக் கொள்கை நகல் கிழிப்பு போராட்டம், திருச்சி இராமகிருஷ்ணா திரையரங்கம் அருகில் காலை 11 மணிக்கு,



பெரம்பலூர் மாவட்டத் தலைவர் துரைதாமோதரன் தலைமையில் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் 60-க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர் .30 க்கும் மேற்பட்ட தோழர்கள் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். ஆர்ப்பாட்டத்தில், ஆதித்தமிழர் பேரவை, விடுதலை சிறுத்தைகள் கட்சி, தந்தை பெரியார் திராவிடர் கழகம், தமிழ்தேச மக்கள் முன்னணி, ஆதித்தமிழர் தொழிலாளர் பேரவை, எஸ்.டி.பி.ஐ., அகில இந்திய மஜ்லீஸ் கட்சி, போன்ற அமைப்புகளைச் சேர்ந்த தோழர்களும் கலந்து கொண்டனர்.

**கிருஷ்ணகிரி:** திராவிடர் விடுதலைக் கழகம் கிருஷ்ணகிரி மாவட்டம் சார்பில் அக்டோபர் 2 அன்று காலை 11 மணியளவில், கிருஷ்ணகிரி பேருந்து நிலையம்




அருகில் உள்ள அண்ணா சிலை எதிரில், மாவட்டத் தலைவர் வாஞ்சிநாதன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் குமார், மாவட்ட அமைப்பாளர் கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சமுக செயற்பாட்டாளர் வேடியப்பன் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். தோழர்கள் 39 பேர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

**விழுப்புரத்தில் :** திராவிடர் விடுதலைக் கழகம் விழுப்புரம் மாவட்டம் சார்பில், தந்தை பெரியார் 141ஆவது பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் 05.10.2019 அன்று மாலை 6:30 மணிக்கு விழுப்புரம் கண்டமங்கலத்தில் நடைபெற்றது. இக்கூட்டத் திற்கு விழுப்புரம் மாவட்டத் தலைவர் பூ.ஆ.இளையரசன் தலைமை வகித்தார். கிருஷ்ணராஜ், விஜி பகுத்தறிவு, தமிழ்வாணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழுப்புரம் மாவட்ட செயலாளர் பெரியார் சாக்ரடீஸ் வரவேற்புரையாற்றினார்.




நிகழ்வின் தொடக்கமாக துரை. தாமோதரன் அவர்களின் மந்திரமா தந்திரமா நிகழ்வு நடைபெற்றது. அதன் பின், தலைமை செயற்குழு உறுப்பினர் அய்யனார் மற்றும் தமிழ்நாடு திராவிடர் கழகத் தலைவர் கா.சு. நாகராசு ஆகியோர் சிறப்புரையாற்றினர். திராவிடர் கழகப் பெரியார் பெருந்தொண்டர் கேவி.ராஜன், பெரியார் சிந்தனையாளர் இயக்கம் தீனா, தி.மு.கழக விஜயகுமார், மக்கள் அதிகாரம் சாந்தகுமார், பி.எஸ்.பி. மதிவதனன், காரை மாவட்ட தி.க. பெரியார் கணபதி, புதுச்சேரி மாணிக்கம், கோண்டூர் சந்தோஷ் மற்றும் தோழர்களும் பொது மக்களும் திரளாகக் கலந்து கொண்டனர். மாவட்ட துணைத் தலைவர் து.சிறீதர் நன்றி கூறினார்.

## நன்கொடை

கழகத் தோழர் பெரியார் யுவராஜ்-லீலாவதி, ஜாதி-தாலி-சடங்கு மறுப்பு மணவிழா மயிலாடுதுறையில் செப்.22 2019இல் நடந்தது. மண விழா மகிழ்வாக, மணமக்கள் கழக ஏடுகளின் வளர்ச்சிக்கு ரூ.5000 நன்கொடை வழங்கியுள்ளனர். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 11th october 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN